## Principal District Munsif Court, Sankarankovil.

தேதி : 05.12.2024

**அ.வ.எண்.** 343/2015

வா.சா.1 – செல்வராஜ்

**வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாண வாக்குமூலத்தின்பேரில் 7 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை** :-

என்ன பரிகாரம் கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு இடம் வேண்டும்என்பதற்காக வழக்குத் தாக்கல் செய்துள்ளேன். வழக்குச் சொத்துக்கள் ஆதியில் வீரபுத்திரத்தேவர் என்பவரின் தந்தையாருக்குப் பாத்தியப்பட்ட சொத்தாகும். வீரபுத்திரத்தேவரின் தந்தையார் பெயர் கட்டாரி தேவர். வழக்குச் சொத்துக்கள் வீரபுத்திரத்தேவரின் தந்தையார் கட்டாரி தேவர் பெயரில்இருந்தது என்பதற்கு நான் ஆவணம் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண்.64/1 ல் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு படிப்பறிவு இல்லை. அதனால் அதைப்பற்றி எனக்குத் தெரியவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி, சர்வே எண்.64/1 ல் 8 ஏக்கர் 57 செண்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்குத் தெரியாது. நான் என்னுடைய பிராதில் 89 செண்ட்க்கு வழக்குத் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண்.64/1 ல் 8 ஏக்கர் 57 செண்ட் உள்ள நிலையில், நான் தற்போது 89 செண்ட்க்கு மட்டும் வழக்குத் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மீதமுள்ள சொத்து என்னவானது என்றால், மீதமுள்ள சொத்துக்கள் வீரபுத்திரத்தேவரின் பங்காளிகளின் சொத்து. வீரபுத்திரத்தேவரின் பங்காளிகள் யார் யார் என்றால் அவர்களைப் பற்றி எனக்குத் தெரியாது. வழக்குத் தாக்கல் செய்ய நான்தான் வழக்கின் விவரங்கள் சொன்னேன். வா.சா.ஆ.1 ல் கண்ட மொத்தமுள்ள 8 ஏக்கர் 57 செண்ட்டில் வழக்குத் சொத்து போக மீதமுள்ள சொத்து யார் யாருக்குப் பாத்தியப்பட்டது என்பதை எனது பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அந்த விவரங்களை ஏன் சொல்லவில்லை என்றால் அதைப்பற்றி எனக்குத் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள புகைப்படம் என்னுடைய புகைப்படம் என்றால் இல்லை. அந்த ஆவணத்தில் முதலில் உள்ள புகைப்படத்தில் பெரியதாய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது எனது மூத்த அண்ணன் வேலுச்சாமியின் மனைவி என்றால் சரிதான்.

அதற்கடுத்து 2 வது  புகைப்படம் வெள்ளத்தாய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது, எனது அண்ணன் மாரியப்பனின் மனைவி என்றால் சரிதான். அதற்கடுத்து உள்ள புகைப்படம் என்னுடைய புகைப்படம் என்றால் சரிதான். நானும் மேற்சொன்ன என் அண்ணன்களின் மனைவிகளும் சேர்ந்து, ராமசாமித்தேவர் என்பவருக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் தான் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது தகப்பனார் பெயர் ராமர்தேவர்  என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு பாலுத்தேவர் என்பது உண்மையான பெயர். ராமர் தேவர்  அவருடைய பட்டப்பெயர்.  பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்னுடைய விலாசமாக எட்டையாபுரம் வட்டம், கோட்டூர் கிராமம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 40 ஆண்டுகளாக நிரந்தரமாக அங்கு குடியிருந்து வருகிறேன். என்னுடைய பூர்வீகம் திருவேங்கடம் வட்டம், ஆவரங்குடி கிராமம் ஆகும். நான் இந்த வழக்கில் நீதிமன்றத்தில் முதன்மை சாட்சியம் அளித்தபோது, நான் R.செல்வராஜ் என்று தான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான்.  என்னுடைய கையெழுத்தில் R எனக் குறிப்பிடப்பட்டுள்ளது ராமர் தேவர் என்றால் சரிதான். நான் கிரையம் கொடுத்த ஆவணத்திலேயே எனது தகப்பனார் பெயர் ராமர் தேவர் எனக் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் எனது தகப்பானருக்கு பாலுத்தேவர் என்று பெயர் இல்லை என்றாலும்  சரியல்ல. நான் எப்போதும் R.செல்வராஜ் என்று தான் கையெழுத்து செய்வேன் என்றால் சரிதான். எனக்கு ஒரு மகள் உள்ளார். அவர் படித்துக்கொண்டிருக்கிறார். என் மகளின் பள்ளி சான்றிதழ்களில் R.செல்வராஜ் என்றுதான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய ஆதார் அட்டையிலும் எனது தகப்பனார் பெயர் ராமர் தேவர் என்று தான் உள்ளது என்றால் சரிதான். எட்டையாபுரம் வட்டம், கோட்டூர் கிராமத்தில் உள்ள என்னுடைய குடும்ப அட்டையிலும் எனது தகப்பனார் பெயர் ராமர்தேவர் என்று தான் உள்ளது என்றால் சரிதான். நான் தனியார் பஸ் நிறுவனத்தில் டிரைவராக  வேலை செய்து வருகிறேன். நான் வேலை செய்யும் பஸ் நிறுவனத்தில் சம்பளம் பெறும்போது, R.செல்வராஜ் என்று கையொப்பமிட்டு சம்பளம் பெறுவேன். நான் கையெழுத்து செய்யும்போது, என்னுடைய இன்ஷியலாக R என்பதைத் தவிர வேறு எழுத்தைப் பயன்படுத்தியதில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் மட்டும் P என ஏன் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் R என கோடிழுக்காமல் கையெழுத்து செய்துவிட்டேன்.

எனது தகப்பனார்பெயரை மாற்றி சொல்வதற்காகவே என்னுடைய பிராதில் P என மாற்றிக் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.5 ல் ஆவணத்தின் கண்டவீரபுத்திரத்தேவர் மகன் தான் என்னுடைய தந்தை என்பதைக் காட்டுவதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. கிராம நிர்வாக அதிகாரியிடம் எழுதி வாங்கியுள்ளேன். வா.சா.ஆ.5 ல் செட்டில்மெண்ட் பதிவேட்டில் சர்வே எண்.64/1 ல் வீரபுத்திரத்தேவர் இன்னும் 6 நபர்கள் பேரில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்குத் தெரியவில்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணம் நாங்கள் ராமசாமித்தேவருக்கு விற்பனை செய்த சொத்து எங்களுக்கு எப்படிப் பாத்தியப்பட்டது என்றால் அந்த சொத்து வீரபுத்திரத்தேவரால் கிரையம் வாங்கப்பட்ட சொத்து, அவரிடமிருந்து எங்களுக்கு கிடைக்கப்பெற்றது. வழக்குச் சொத்தை தவிர வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் வீடு உள்ளது. எத்தனை வீடுகள் உள்ளது என்றால் 4 வீடுகள் உள்ளது. அந்த வீடுகள் யார் பெயரில் உள்ளது என்று எனக்குத் தெரியாது. அந்த வீடுகள் எங்கெங்கு உள்ளது என்று எனக்குத் தெரியும். மேற்சொன்ன 4 வீடுகளில் நான் இந்த வழக்கில் பாகம் கோரவில்லை என்றால் வீ டுகளை அந்தக் காலத்திலேயே பாகம் பிரித்துவிட்டார்கள். 4 வீடுகளையும் பாகம் பிரித்துக்கொண்டதாக நான் சொல்வது கட்டாரித்தேவருக்கும் பாலுத்தேவருக்கும் இடையில் ஏற்பட்ட பாகம் என்றால் வீரபுத்திரத்தேவர் இருக்கும்போதே பாகம் பிரித்துக்கொண்டுவிட்டார். நான் மேலே சொன்ன பாகத்தின்போது, பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்தும் பாகம் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் சொல்லும் பாகப்பிரிவினை எவ்வளவு காலத்திற்கு முன்பு பிரிக்கப்பட்டது என்றால் எனக்கு 15 வயதிருக்கும்போது பாகம் பிரிக்கப்பட்டது. அப்போது விவசாய நிலங்கள் மட்டும் பாலுத்தேவருக்கும் கட்டாரித்தேவருககும் பாதிப்பாதியாக பாகம் பிரிக்கப்பட்டது. அதற்கு முன்பே மேற்சொன்ன 4 வீடுகளும் பாகம் பிரிக்கப்பட்டுவிட்டது. எனக்குத் தெரிந்து எங்களுடைய குடும்பமும், எனது பெரியப்பா கட்டாரித்தேவர் குடும்பமும் தனித்தனியாக வாழ்ந்து வருகிறோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.5 ல் கண்ட வீரபுத்திரத்தேவருக்கு யார் யார் வாரிசுகள் என்பதைக் காட்டுவதற்கு நான் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வீரபுத்திரத்தேவரின் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யாததால் நான் கேட்கும் பாக பரிகாரம் எனக்குக் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 கொடி வழி ஜாபிதாவில் வீரபுத்திரத்தேவருக்கு கட்டாரித் தேவர், பாலுத்தேவர், பெரியமாடத்தி, சின்ன மாடத்தி, ஆறுமுகத்தாய், கோமதியம்மாள் ஆகியோர் வாரிசு என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன பெரியமாடத்தி, சின்னமாடத்தி, ஆறுமுகத்தாய், கோமதியம்மாள் ஆகியோர் தங்களுடைய பாக உரிமையை எந்தத் தேதி, மாதம், வருடத்தில் தங்களுடைய சகோதரர்களுக்கு விட்டுக்கொடுத்தார்கள் என்று என்னுடைய பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எவ்வளவு காலங்களுக்கு முன்பு அவ்வாறு விட்டுக்கொடுத்தார்கள் என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். மேற்சொன்ன பெண் பிள்ளைகள் தங்களுடைய சகோதரர்களுக்கு விட்டுக்கொடுத்ததாக எனக்கு யார் சொன்னார்கள் என்றால் எனக்கு யாரும் சொல்லவில்லை. பெரியமாடத்தி, சின்னமாடத்தி, ஆறுமுகத்தாய், கோமதியம்மாள் ஆகியோர் தற்போது உயிருடன் உள்ளார்களா என்றால் இல்லை. அவர்கள் நால்வரும் இறந்துவிட்டார்கள். பெரியமாடத்தி, சின்னமாடத்தி, ஆறுமுகத்தாய், கோமதியம்மாள் ஆகியோர்களின் பேரப்பிள்ளைகள் உயிருடன் உள்ளார்கள். அவர்களின் பிள்ளைகள் இறந்துவிட்டார்கள். மேற்சொன்ன பெரியமாடத்தி, சின்னமாடத்தி, ஆறுமுகத்தாய், கோமதியம்மாள் ஆகியோர்களின் பேரப்பிள்ளைகளை இவ்வழக்கில் தரப்பினராகச் சேர்க்காததால் இவ்வழக்கு அவசியத்தரப்பினரை சேர்க்காத குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்தில் எப்போது பாகம் ஏற்பட்டது என்றால் எங்கள் குடும்பத்தில் பாகம் எதுவும் பிரிக்கப்படவில்லை. எனது உடன்பிறந்தவர்களாக சொல்லக்கூடிய வேலுச்சாமி, மாரியப்பன், ராமத்தாள், வள்ளித்தாய் ஆகியோர்களுக்குள் எந்தகாலத்திலும் இன்றுவரை பாகம் நடந்ததில்லை என்றால் சரிதான். வேலுச்சாமி, மாரியப்பன், ராமத்தாள், வள்ளித்தாய் மற்றும் எனக்கும் இடையில் பாகம் நடந்ததாக சொல்லியிருந்தால், அது தவறு என்றால் சரிதான். என்னுடைய பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் எனக்கும் எனது சகோதர சகோதரிகளுக்கும் இடையில் பாகம் ஏற்பட்டதாக என்னுடைய அறிவில்லாமல் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளதை நான் மறுக்கிறேன் என்றால் சரிதான். என்னுடைய வழக்கின்படியே, என்னுடன் பிறந்த வேலுச்சாமி, மாரியப்பன், ராமத்தாள், வள்ளித்தாய் ஆகியோர் இந்த வழக்கிற்கு அவசிய கட்சியினர் என்றால் சரியல்ல.

வழக்குச் சொத்தானது 4, 5 பிரதிவாதிகளின் குடும்பத்திற்குப் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகளின் குடும்பத்தில் ஏற்பட்ட வாய்மொழி குடும்ப ஏற்பாட்டில் வழக்குச் சொத்து 4, 5 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்டு வா.சா.ஆ.2 கிரைய ஆவணம் மூலம் 7ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்திற்கு தனிப்பாசனம் உள்ளதா என்றால் இல்லை. அது மானாவாரி இடம். வழக்குச் சொத்தில் கரும்பு மகசூல் எப்படி வந்தது என்றால் வாங்கியவர்கள் அதற்கு தண்ணீர் பாய்ச்சி மகசூல் செய்கிறார்கள். வழக்குச் சொத்தில் சொட்டுநீர் போட்டுள்ளார்களா என்றால் நான் பார்க்கவில்லை. வழக்குச் சொத்திற்கு நான் தீர்வை செலுத்தியுள்ளேனா என்றால் இதுவரை கிடையாது. வழக்குச் சொத்தை நானோ எனது முன்னோர்களோ அனுபவித்து வந்ததில்லை என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தை 7ம் பிரதிவாதி கிரையம் பெற்று, சொட்டுநீர் பாசனம் அமைத்து, பாடுபட்டு வருகிறார் என்றால் சரியல்ல. நான் மேலே சொன்ன சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்காததால், இந்த வழக்கு பகுதி பாகப்பிரிவினை குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கைத் தாக்கல் செய்ய எனக்கு எந்த முகாந்திரமும் இருந்ததில்லை என்றால் சரியல்ல. என்னுடைய தந்தையின் உண்மையான பெயரையும், என்னுடைய விலாசத்தையும் நான் நிரூபிக்க கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல.நான் இந்த வழக்கில் கோரியுள்ள எந்தப் பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 கிரைய ஆவணம் நல்லெண்ணத்தின் பேரில் கிரையம் பெற்ற ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ரத்து செய்யக்கோர எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தின்கீழ் பிராது தபசில் சொத்தின் உரிமையும் உடைமையும் 7ம் பிரதிவாதிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு 7ம் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> : இல்லை.

(Sd.) xxxxxxx

Principal District Munsif,

Sankarankovil.